# தொண்டரடிப் பொடி ஆழ்வார்

சோழ நாட்டில் திருமண்டங்குடி என்ற சிற்றூரில் மார்கழி மாதம் கேட்டை நக்ஷத்திரத்தன்று முன்குடுமிச் சோழியர் குலத்திலே அவதரித்தார் இவர். இவருக்கு விப்ரநாராயணர் என்று பெயரிட்டனர் இவரது பெற்றோர். உரிய காலங்களில் முறைப்படி வேதங்களையும் சாத்திரங்களையும் கற்றுத் தேர்ந்தார். திருமணத்தில் விருப்பம் அற்றவராய், ஸ்ரீரங்கம் சென்று சேர்ந்து அங்கு ஒரு நந்தவனம் அமைத்து ஸ்ரீரங்கநாதனுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார்.

ஸ்ரீரங்கத்திற்கு வடக்கிலுள்ள உத்தமர் கோயிலில் தேவதேவி என்றொரு தாசி அழகில் சிறந்தவள். அவள் சோழராசனது அரசவையில் ஆடிப்பாடி, அரசனை மயக்கிப் பரிசுகள் பலவும் பெற்றாள். திரும்பி வரும் போது விப்ரநாராயணரது நந்தவனத்தைக் கண்டாள். அங்கே விப்ரநாராயணரையும் கண்டு, அவரையும் தன் அழகால் மயக்க முயன்றாள் அப்போது தேவதேவியுடனிருந்த அவளது தமக்கை, விப்ரநாராயணர் இறைவனின் உண்மையான பக்தர் என்றும், அவர் இவ்வுலக ஆசைகளை விட்டவர் என்றால், அதனால் அவரை தேவதேவியால் மயக்க முடியாது என்றும் கூறினாள். சினமுற்ற தேவதேவி தன் தமக்கையுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டாள். அதாவது, தேவதேவி விப்ரநாராயணரை மயக்கி விட்டால் தேவதேவிக்கு அவள் தமக்கை அடிமை ஆகிவிடவேண்டும்; மயக்க முடியாவிட்டால் தேவதேவி தன் தமக்கைக்கு அடிமையாகிவிடவேண்டும் என்பதே.

தேவதேவி தன் ஆபரணங்களைக் களைந்து விட்டு எளிய காவியுடையுடன் ஒரு துறவிபோல் விப்ரநாராயணரது ஆச்ரமத்திற்குள் நுழைந்தாள். விப்ரநாராயணரது கால்களைப் பிடித்துக்கொண்டு தனக்கு அடைக்கலம் தருமாறு வேண்டினாள். தான் பிறப்பால்

ஒரு தாஸி என்றும் தனக்கு அத்தொழிலில் விருப்பம் இல்லை என்றும் இறைவனுக்குத் தொண்டு செய்யவே தன் மனம் விரும்புகின்றது என்றும் (பொய்) கூறினுள். அவளது பொய் புரைகளை நம்பிய விப்ரநாராயணரும், மாலை தொடுத்தல் செடிகளுக்கு நீர் பெய்தல், சோலையைப் பாதுகாத்தல் முதலிய எளிய கைங்கர்யங்களை அவளிடம் ஒப்படைத்தார்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் பெருமழையில் நனைந்து கொண்டிருந்த தேவதேவியைக் கண்ணுற்றவர் அவளுக்கு தன் குடிலிலேயே தங்க இடமளித்தார். அப்போது அவரை நெருங்கி மயக்கி தன்வசப்படுத்திக் கொண்டாள் தேவதேவி. அன்றிலிருந்து விப்ரநாராயணரும் தேவதேவிடம் பித்துப்பிடித்தவர் போல் காதல் வயப்பட்டார். தமது கைங்கர்யத்தையும் மறந்தார். அவரிடமிருந்த பொருள் கரைந்ததும் தேவதேவி அவரை விட்டுப் பிரிந்து ஓடினுள். அவளைப்பிரிந்து வாழமுடியாமல் தவித்தார் விப்ரநாராயணர். தன் பக்தனின் இந்நிலைக்கு இரக்கப்பட்ட அரங்கநாதன் மனிதவடிவம் கொண்டு தன் கோயிலிலிருந்து பொன்வட்டிலை எடுத்துக்கொண்டு போய் தேவதேவியிடம் விப்ரநாராயணர் கொடுத்ததாகக் கொடுத்து விட்டார். தேவதேவியும் விப்ரநாராயணரை மீண்டும் விரும்பலானுள்.

மறுநாள் பொன்வட்டில் களவு போனது அரசனுக்குத் தெரியவந்தது. விசாரணையின் போது அவ்வட்டில் தேவதேவியின் மாளிகையில் உள்ளதென அவளது வீட்டு வேலைக்காரி ஒருத்தி தெரிவித்தாள். அரசனும் தேவதேவியை அழைத்து விசாரிக்க, அவள் அவ்வட்டிலை தனக்கு விப்ரநாராயணர் கொடுத்ததாக அவரது வேலைக்காரன் ஒருவன் கொடுத்தான் என்றுள். அரசன் தேவதேவிக்கு அபராதம் விதித்து விப்ரநாராயணரைச் சிறையில் இட்டான். மீண்டும் சோதனைக்குள்ளான பக்தனின் நிலை கண்டு இரங்கிய ஸ்ரீரங்கநாதன் அன்றிரவு அரசனின் கனவில் தோன்றி அவனுக்கு உண்மையை உணர்த்தினுர். தாஸிவிடம் காதல் கொண்ட கருமம் தீர்வதற்காகவே விப்ரநாராயண

ருக்கு இச்சோதனையை அளித்ததாகவும் கூறினார். உண்மையை உணர்ந்த அரசனும் அவரை விடுதலை செய்தான்.

அந்தணராய்ப் பிறந்தும், தாஸியிடம் காதல் கொண்டு, எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதையும் மறந்து விட்டதற்காக மிகவும் வருந்தினார் விப்ரநாராயணர். அதற்கு ப்ராயச்சித்தம் செய்ய விரும்பி பெரியோர்களது யோசனையைக் கேட்டார். அவர்களும் எம்பெருமானுடைய அடியார்க்கு அடியனாகி அவர்களுடைய ஸ்ரீபாததீர்த்தத்தை உட்கொள்ளுதலே சிறந்த பரிகாரம் என்று கூறினர். அவ்வாறே செய்து தன் பாவத்தைப் போக்கினார் விப்ரநாராயணர்.

அன்று முதல் இறைவனுடைய தொண்டர்க்கெல்லாம் தொண்டனாகி அவர்களுடைய திருவடிகளில் நிகழும் துகளாக (தூசாக)வே தம்மைக் கருதினார். அதனால் தொண்டர் அடிப்பொடி என்ற பெயரும் பெற்றார்.

பிறகு அரங்கன் மேல் தனக்குள்ள பக்தியை பல பாசுரங்களால் வெளியிட்டார். திருப்பள்ளியெழுச்சி (10 பாசுரங்கள்) திருமாலை (45 பாசுரங்கள்) என்ற இரண்டு திவ்யப்ரபந்தங்களே அவை. அவற்றுள்

சூதனாய்க் கள்வனாகி தூர்த்தரோடிசைந்த காலம்
மாதரார் கயற்கணென்னும் வலையுள் பட்டழுந்து வேனை
போதரே என்று சொல்லிப் புந்தியில்புகுந்து, தன்பால்
ஆதரம் பெருக வைத்த அழகனூர் அரங்க மன்றே

என்ற திருமாலைப்பாசுரம் அவருடைய வரலாற்றைத் தெளிவாக வுணர்த்தும். ஒரு பதிவ்ரதையைப்போல் இவர் ஸ்ரீரங்கநாதனைப் பற்றி மட்டுமே பாசுரங்கள் பாடியுள்ளார். வேறு திவ்ய தேசத்து எம்பெருமான்களைப் பாடவில்லை. இவ்வாறு அரங்கனுக்குத் தொண்டு பூண்டு ஒழுகிய இவர் இவ்வுலகில் 105 வருஷங்கள் வாழ்ந்தருளினார்.

★